மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

City and Urban Life in 'Manjanathi' by Poet Tamilachi Thangapandian

Dr. P.S. Mooventhan

Associate Professor, Department of Tamil, S.S. Government Arts College, Tiruttani, India

Manuscript ID : **MT17A0134**
Volume : **3**
Issue : **2**
Month : **June**
Year : **2023**
Received: 24.04.2023
Revised: 23.05.2023
Accepted: 01.06.2023
Published: 10.06.2023
Pages : 1-8
DOI: 10.5281/zenodo.8022825

ABSTRACT:

Modern poetry has permeated all levels of social life today and is recording its range. The realities of life are material today. Poetry in particular is being recorded as the voice of the oppressed, the marginalized, the gender-disenfranchised, the homeless and the stateless. Poet Tamilachi Thangapandian is a proof of the statement that 'poets are mirrors of time'. Her poems convey the conditions of human life realistically without any fiction. 'Manjanathi' has highlighted the current state of human life activities through a collection of poems. In particular, this article highlights how urban life has changed human activities and how migration from rural to urban areas has brought about human changes.

KEYWORDS:

Manjanathi, City, Urbanity, Civilization, City Life, Alienation

மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
தொகுதி-3 பதிப்பு-2 ஜூன் 2023 | E-ISSN: 2583-0449

கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியனின் 'மஞ்சணத்தி'யில் நகரமும் நகரம்சார் வாழ்வியலும்

முனைவர். ப.சு. மூவேந்தன்,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, அ.சு.சு. அரசு கலைக்கல்லூரி, திருத்தணி, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

நவீன கவிதைகள் இன்றைக்குச் சமூக வாழ்வின் எல்லா நிலைகளிலும் ஊடுருவி தன் வீச்சினைப் பதிவு செய்து வருகின்றன. வாழ்வியல் யதார்த்தங்கள் இன்றைக்குப் பொருளாகியுள்ளன. குறிப்பாகக் கவிதை ஒடுக்கப்பட்ட, புறந்தள்ளப்பட்ட, பாலினத்தால் உரிமைகள் மறுக்கப்பட்ட, வீடற்ற, நாடற்றவர்களின் குரலாகப் பதிவாகி வருகிறது. கவிஞர்கள் காலத்தின் கண்ணாடியாகத் திகழ்பவர்கள் என்ற கூற்றுக்குச் சான்றாகத் திகழ்பவர் கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன். அவரது கவிதைகள் மனித வாழ்வியலின் நிலைப்பாடுகளை எவ்விதப் புனைவுமின்றி யதார்த்தமாக எடுத்துரைப்பவை. மனித வாழ்வியல் செயல்பாடுகள் இன்றைய நிலையில் எத்தகு நிலையில் அமைந்துள்ளன என்பதனை மஞ்சணத்தி கவிதைத் தொகுப்பின் வழியாக எடுத்துரைத்துள்ளார். குறிப்பாக, நகர வாழ்வியல் மனிதச் செயல்பாடுகளை எவ்வாறெல்லாம் மாற்றியுள்ளது என்பதனையும், கிராமத்திலிருந்து நகரத்திற்கான புலப்பெயர்வு எத்தகு மானிட மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பதனையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைந்திருக்கிறது.

கருச்சொற்கள்

மஞ்சணத்தி, நகரம், நகரியம், நாகரிகம், நகர வாழ்க்கை, அந்நியமாதல்

முன்னுரை

தற்காலத்தில் காத்திரமாக இயங்கிவரும் இலக்கியப் படைப்பாளர்களில் கவிஞர்களுள் தமிழச்சி தங்கபாண்டியன் குறிப்பிடத்தக்கவராகத் திகழ்கிறார். அவரது கவிதைகள் பண்டைத் தமிழர் வாழ்வியல் மரபுகளையும் நகர நாகரிகத்தையும் எடுத்துரைப்பவை. நகர நாகரிகம் ஏற்படுத்தி வரும் இயற்கை இழந்த வாழ்வியலின் தன்மையினையும், நாகரிக வளர்ச்சி என்ற போர்வையில் நகர்மயமாதல் ஏற்படுத்தி வரும் பண்பாட்டுச் சீரழிவினையும் தனது கவிதைகளின் வழியாக உணர்த்தி

வருகின்றார். அவரது மஞ்சணத்தி கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகள் உணர்த்தும் நகர வாழ்வியலின் அந்நியத் தன்மையினையும் இவற்றையெல்லாம் கடந்து வாழவேண்டிய நிலையில் உள்ள மானுட வாழ்வியற் செயல்பாடுகளையும் குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

நகரியம் : அந்நியமாகும் வாழ்க்கை

அந்நியமாதல் கோட்பாட்டு ரீதியில் நோக்கினாலும், சொற்பொருள் நிலையில் நோக்கினாலும் மனிதன் தன் இயல்பிலிருந்து தனித்தியங்குவதனையே குறிக்கிறது. தனிமனிதன் சமூகத்தோடும் உறவுகளோடும், நட்பினோடும் உறழ்ந்தும், இணைந்தும் தனித்தியங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான். வாழ்வின் பொருட்டும் வாழ்வின் தேவைகள் பொருட்டும் கிராமத்திலிருந்து நகரத்திற்குப் புலம்பெயர்ந்து வாழும் மனிதனின் ஆசைகள், எண்ணங்கள், சிந்தனைகள் நகரியச் சூழலில் அந்நியப்படுத்தப்படுகின்றன.

நகர வாழ்க்கை இன்றைக்கு மிகச்சுருங்கிய வட்டத்திற்குள் அடங்கிவிட்டது. நகர வாழ்க்கையின் மக்கட்தொகைப் பெருக்கத்தால் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மானிட வாழ்க்கையைத் தனித்தனி அறைக்குள் தள்ளி வைத்து விட்டன. இதனால் மனிதனது தேவைகள் அனைத்தும் அந்த அறைக்குள்ளாகவே அமைத்துக் கொள்ளும்படியான வாழ்க்கை உருவாக்கம் பெற்றுவிட்டது. மலர்களும், மரங்களும், செடிகொடிகளும் வீட்டுக்கு வெளியேயும், மரங்களின் நிழலில் வீடுகள் அமையும் நிலையும் இன்றைக்கு மாறியுள்ளது. மரங்கள், செடிகொடிகள், மலர் வனங்கள் வீட்டுக்குள்ளேயே உருவாகும் நிலை ஏற்பட்டுவிட்டதனைக் கவிதைகள்வழி காட்டுகிறார்.

நகர வாழ்க்கையைப் பற்றிய 'போன்சாய்' என்னும் தலைப்பிட்ட கவிதை இவ்வாறு விரிகிறது.

> **"அடுத்த வீட்டுக்குள் குலைதள்ளி விடுமோ**
> **என்கின்ற பதட்டத்துடன்**
> **வளர்க்கப்படும் என் வீட்டு வாழையால்**
> **எப்படித் தர இயலும்?**
> **என்றாவது இளைப்பாற வரும்**
> **ஒரு நாடோடிக்கான உணவு**
> **பசியாற்றப்படும் அகன்ற பச்சை இலை."** (ப. 37)

என்பதில் நகரிய வாழ்க்கை முறை இன்றைக்கு அந்நியப்பட்டு இருப்பதனை இக்கவிதை காட்சிப்படுத்துகிறது. மக்களுக்குப் பயன்தரும் விதமாக அமைந்த கனிதரும் மரங்களும், நிழல்தரும் மரங்களும் இன்றைக்கு வீட்டுக்கு உள்ளேயே வளர்க்கப்பட்டு

தனிமனிதக் காட்சிப்பொருளாக மட்டுமே விளங்கும் நிலைக்குள் நகரிய வாழ்க்கை உள்ளதனை இக்கவிதை எடுத்துரைக்கிறது.

பொய்த்துப்போன மனிதநேய உணர்வு

அந்நியமாதலின் பெரும் விளைவு மனிதநேயம் அற்றுப் போவதுதான். மனிதர்கள் பொருள்களாகவும், உற்பத்திப் பண்டங்களாகவும் ஆகிவிட்ட நகரியச் சூழலில் மனிதம் மறந்தவர்களாக மாறிவாழும் நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். இதனை யதார்த்தப் போக்கில் 'கலவி' என்னும் தலைப்பிட்ட கவிதையில்,

"ஒரு கர்ப்பிணியின் வாந்தியினை
எடுத்து உண்ட எத்தியோப்பியக்
குழந்தையின் பட்டினியைத்
தொலைக்காட்சியில் பார்த்த பின்பும்
கலவி இன்பம் துய்த்த
அந்த இரவிற்குப் பின்தான்
முற்றிலும் கடைந்தெடுத்த
நகரவாசியானேன் நான்" (ப. 38)

என்று காட்சிப்படுத்துகிறார். சமூகத்தில் எது நடந்தாலும் அதனைப் பற்றிய கவலை சிறிதுமின்றி வாழும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்ட நிலையினை ஒருபுறமும், உலகத்தைப் பற்றிய சிந்தனை ஏதுமின்றி வாழும் நகரியவாசியின் நிலையினை மறுபுறமும் இக்கவிதை யதார்த்தப்படுத்துகிறது.

சுகாதாரமான நகர வாழ்க்கை

சுவாசிக்கும் காற்றும் பருகும் தண்ணீரும் இன்றைக்கு மாசடைந்து உயிரினங்கள் பயன்படுத்த இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன. மனிதன் இயற்கையையும், உலக உயிரினங்களையும் தன் தேவைக்காக நாளும் அழித்துவரத் தொடங்கியதன் விளைவை இன்றைக்கு எதிர்கொண்டிருக்கிறான். சுத்தம் சுகாதாரம் என்பது இன்றைக்குப் பெயரளவில் மட்டுமே உள்ளது. மேலைநாட்டுச் சுத்தம் பற்றிப் புகழ்ந்து பேசும் நகரவாசி, தன் சுத்தத்திற்காக, தன்னைச் சுற்றியுள்ளவைகளை அசுத்தம் செய்வதனை வாடிக்கையாக்கிக் கொண்டிருக்கிறான் என்பதனை நறுக்குத் தெரித்தாற்போல் 'நாற்றம்' என்னும் கவிதைவழி,

"யாரும் கவனிக்காத அந்தக்
கணத்திற்காகக் காத்திருந்து
தெருவில் குப்பையைக் கொட்டியாயிற்று
கழுவித் துடைத்த பின்பும்
கைகளில் ஒட்டிக் கொண்டிருக்கிறது
'தீதும் நன்றும் பிறர்தர வாரா'
என்ற லட்சுமண வாத்தியாரின்
பொடி மட்டை நாற்றம்" (ப. 39)

என்று காட்சிப்படுத்துகிறார் கவிஞர். ஏட்டில் படித்ததை ஒதுக்கிவைத்துவிட்டு வாழும் அவல வாழ்க்கையினை இக்கவிதையால் எடுத்துரைக்கிறார். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பதில் நாளைய அவலத்தைச் சுட்டும் கவிஞரின் சொல்லாடல் வியத்தற்குரியது.

கிராமத்துக் கூட்டுறவு வாழ்க்கையின் சாயல் நகரத்துக் குடியிருப்பில் மட்டுமே நிறைந்திருக்கிறது. பக்கத்தில் வசிப்பவர் யார் என்றுகூட அறிந்து வைத்துக் கொள்ளாத மனிதநேயமற்ற மனிதர்கள் தன் வீடு, தன் வாசல், தன் உறவு என்றே வாழ்ந்து கொண்டிருந்தால் எதிர்காலம் என்பது எப்படித்தான் இருக்குமோ? என்ற கவலையினை, 'பகுத்தல்' தலைப்பிட்ட கவிதையால்,

"குடியிருப்பில்
அவரவர் கதவு இலக்கம்
அவரவர் மின் கட்டணப் பெட்டி
அவரவர் வண்டி நிறுத்துமிடம்
அவரவர் பால், தபால் பைகள்
எல்லாமும் பிரித்தாயிற்று
திடீரென அடைத்துக் கொள்ள
எப்படிப் பிரிக்க அவரவர் சாக்கடையை?" (ப. 41)

என்று காட்சிப்படுத்துகிறார். 'எல்லா நதிகளும் கடலை நோக்கியே' என்றாலும், நதிகளில் தான் எத்தனை பேதங்கள்? சாதி, மதம், இனம், மொழி, பால் எனச் சொல்லில் அடங்கா பகுப்புகளால் வாழும் மனித இனம் தன் வாழ்க்கையை அர்த்தமற்றதாக்கிக் கொண்டு, சாக்கடைப் புழுக்களாய் மட்டுமே கலந்து வாழ்ந்து கொண்டு இருப்பதனை இக்கவிதையால் சுட்டுவதனைக் காணலாம்.

நகர்மயமாதல் தந்த சீரழிவுகள்

நகர் மயமாதல் மனிதனை மனிதப்பண்புகளை இழக்கச் செய்ததோடு நின்றுவிடாது அவன் நகரைச் சார்ந்தே வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. கிராமியக் கலைகளும், விழாக்களும், சடங்குகளும், விளையாட்டுக்களும் இன்றைக்குப் பொலிவிழந்து கொண்டு வருவதோடு, கலைஞர்களின் வாழ்வியலையும் சீரழித்துவிட்டன. நகர மோகம் மக்களை நாளும் ஆட்டிப் படைப்பதோடு, கிராமங்கள் தன் முகங்களை மறைக்கத் தொடங்கிவிட்டன. நகர்மயமாதல் ஒவ்வொரு கிராமத்தையும் இயற்கை மரபுகளிலிருந்து பின்னோக்கிச் சென்று கொண்டிருப்பதனைத் 'தொலைதல்' என்னும் தலைப்பிட்ட கவிதையில்,

"கழைக் கூத்தாடிகள் ஜிகினா உடையில்
கோவில் திருவிழாக்களுக்கு வந்துவிட்டார்கள்
சர்க்கஸ் கோமாளிகள்
திருமண வீட்டில் வரவேற்றுக் கை குலுக்குகிறார்கள்
கிடாய்வெட்டி ரத்தப் படையலிடும் பூசாரிகள்
தெருமுனைக்கோயிலில்
இரண்டு நேரம் விளக்குப் போடுகிறார்கள்
அடவு வைத்து கூத்து கட்டுபவர்கள்
திரைப்படங்களில் தலைகாட்டும் வயதான
அப்பாக்களாகி விட்டார்கள்" (ப. 42)

என்று காட்சிப்படுத்துகிறார். கிராமியக் கலைஞர்கள் தங்கள் வாழ்க்கையின் பொருட்டு நகரச் சூழலுக்குப் புலம்பெயர் கலைஞர்களாக மாறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதனை இக்கவிதையால் எடுத்துரைக்கிறார். நகர்மயமாதல் புனைவை, பொய்யை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துவதை இக்கவிதை சுட்டுகிறது. கிராமங்கள் தன் பொலிவை இழக்கும் போது, மண்ணையும் மக்களையும் இருட்டடிப்புச் செய்வனவாகவே நகர்மயமாதல் நிகழ்வதை இக்கவிதை புலப்படுத்தி நிற்கிறது.

இருப்பின் குரல்

'உலகம் மக்கள் அனைவருக்கும் பொதுவானது' என்பது ஏட்டில் மட்டுமே உள்ளது. உலகம் மொழி, இனம், குலம், மதம், சாதி, பால், நிறம் எனப் பலநிலைகளில் தனித்தியங்கி நிற்கிறது. ஒரு நாட்டில் வீடற்றவர்களைப் பார்க்கலாம்; ஆனால் தனக்கென நாடற்றவர்களைப் பார்ப்பது இயற்கைக்கு முரணானது. ஆனால், நாடற்றவர்களாக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்ட மாந்தனின் நிலையோ, அவலமானது.

நாடற்றவனின் வீட்டுக்காக நாளும் பேசிப்பேசியே நாடற்றவனைப் புறந்தள்ளி வாழப் பழகிவிட்ட மாயச்சூழலை, 'குரல்' என்னும் கவிதையில்,

"அறையற்றவர்களின் குரல் பற்றி
அறிவீர்களா? என்று
வீடற்றவர்களிடம் கேட்டதற்கு
ஊரற்றவர்களிடம் விசாரியுங்களேன்
ஒருவேளை
நாடற்றவர்கள்
உங்களுக்கு உதவலாம் என்றார்கள்
குரலற்றவனின் குரல்
அவர்களுடையது என்பதால்
அறையற்று, வீடற்று, ஊரற்று
ஊர்ந்து திரிவதாய்
நாடற்றவன் சொன்னான்
பேச்சு வார்த்தையில்
பேசுவது குறித்து
அனைவரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். (ப. 50)

என்று எடுத்துரைக்கிறார். புலம்பெயர்ந்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களின் வாழ்வியல் நிலைப்பாட்டினை இக்கவிதை எடுத்துரைக்கிறது.

நகர வாழ்க்கை

'கெட்டும் பட்டணம் போ' என்று சொல்லி, நகரத்தின் வாழ்க்கையைச் சொல்லிச் சொல்லியே பழகிக் கொண்ட மக்களினம் நகரத்தை நோக்கி நாளும் படையெடுத்த வண்ணம் உள்ளது. கிராமங்கள் இன்றைக்கு வாழத் தகுதியற்றவர்களின்; இருப்பிடமாக மட்டுமே இருந்து வருகிறது. தன்னை நோக்கி வருபவனை இரு கரம் கூப்பி வருக வருக என அழைக்கும் நிலையில் இல்லை. அது பசியாலும், பட்டினியாலும் துவண்டு போன விளிம்புநிலை மக்களால் நிறைந்தது என்பதனை, 'கங்கு' என்னும் தலைப்பிட்ட கவிதையில்,

"சபிக்கப்பட்ட பட்டினியுடன்
திரும்புபவனுக்கு
நிச்சயிக்கப்பட்ட தண்டனையெனக்
காத்திருக்கின்றது நகரம்
கருமையின் கங்குகளை ஊதியபடியும்,
இருளின் நபும்சகத்தினைப் பூசியபடியும்
பசியாற்றலாம்
ஓடு சிதறின தேங்காய்க் கீற்றுக்களென
ஒரு பிச்சைக்காரனின் ஆழ்தூக்கமும்
சுவரொட்டி ஒட்டுபவனது பெருஞ்சிரிப்பும்" (ப. 56)

என்று எடுத்துரைக்கிறார். பிச்சைக்காரர்கள், சுவரொட்டி ஒட்டுபவர்கள், பசியால் தவிப்பவர்களால் நிரம்பியது நகர வாழ்க்கை என்று அறிவுறுத்துவதோடு, கிராமியத்தின் இனிமையும், இளமையும் இருப்பின் உண்மையும் அறியாதவர்களே நகரத்தை நோக்கி வருவார்கள் என்ற நிலைப்பாட்டினையும் இக்கவிதையால் எடுத்துரைக்கிறார்.

நினைவுகளால் நகர்ந்திருக்கும் நகரம்

நகரங்கள் சங்க காலப் பாலை நில வாழ்க்கையைக் காட்சிப்படுத்துபவை. காற்றும் நீரும் காசுகளால் நிரம்பியவை. காசுள்ளவனுக்கே சுவாசிப்பதற்குக் காற்றும், இதமான நீரும் கிடைக்கும் என்றாலும் கிராமிய நினைவுகளோடு வாழ்தலும் நகர வாழ்க்கையில் இன்பமே என்பதனை,

"நகரத்து மதியங்கள்
ஒன்றும் அவ்வளவு
சபிக்கப்பட்டவை அல்ல
புளித்த மோரில்
கம்புருண்டைகள்
நிறைந்த வெண்கலத்
தூக்குகள் தொங்கும்
மாமரக் கிளைகளை
நினைத்திருக்கையில்" (ப. 130)

என்னும் கவிதையால் எடுத்துரைக்கிறார்.

நகர வாழ்வில் பெண்கள் படும் பாடு

நகர வாழ்க்கை பெண்களுக்குப் பாதுகாப்பற்றதாகவே இருக்கிறது. மனிதநேயம், உயிரக்கம், கருணை என்பதெல்லாம் தேவை கருதியே காட்டப்படுகிறது. நகர வாழ்வில்

மக்கள் தொகைப் பெருக்கம் மக்களைச் சுதந்திரமாக நடமாடக்கூட அனுமதிப்பதில்லை. மக்கள் நிரம்பிய பேருந்துகளிலும், பொது இடங்களிலும் பெண்கள் படும் இன்னல்களை,

> **“வீடு திரும்பியவுடன்**
> **ஒட்டியிருந்த ஆடைகளை**
> **உலர வைத்தாயிற்று**
> **பயணத்தில் பார்த்த**
> **நனைந்த உடல்களினால்**
> **சேரும் சகதியுமான மனசை?”** (ப. 106)

என்னும் கவிதையால் காட்சிப்படுத்துகிறார். மனிதநேயம் மறந்த நிலையில்; நடந்து கொள்ளும் மக்களின் நிலையைக் காட்டுவதோடு நில்லாது, எல்லாவற்றையும் எளிதாகக் கடந்துசெல்லும் சகதிகள் நிறைந்த நகர வாழ்க்கையின் அவலங்களை இக்கவிதையால் எளிமையாகப் புரியும்படி காட்டுவதை உணரலாம்.

முடிவுரை

இலக்கியத்தில் சமூக இருப்பினைக் காட்டுவதோடு நின்றுவிடாது, படிப்பவர் உள்ளங்களில் அதிர்வுகளை ஏற்படுத்துவதோடு நிற்காது, அவலங்களுக்குரிய காரணங்களையும் உரிய தீர்வுகளையும் முன்வைத்து படைப்பாக்கம் செய்யப்படுகின்றன. அவ்வகையில் படைக்கப்பட்ட கவிதைகளாகவே தமிழச்சி தங்கபாண்டியனின் ‘மஞ்சணத்தி’ கவிதைகள் அமைந்திருப்பதனைக் காணமுடிகிறது. நகர வாழ்க்கை தரும் தனிமையையும் தனிமை சார்ந்த வாழ்வியலையும் காட்டுவதோடு நிற்காது, நகர வாழ்க்கை கற்றுத்தரும் பாடங்களையும் காட்சிப்படுத்துகின்றன. நகர வாழ்க்கை கானல் நீர் என்பதனையே காட்டுவதாக இக்கவிதைகள் அமைந்திருப்பது தெளிவாகிறது.

துணைநூற்பட்டியல்

1. தமிழச்சி தங்கபாண்டியன். *மஞ்சணத்தி*. சென்னை, உயிர்மை பதிப்பகம், 2009.
2. வல்லிக்கண்ணன். *தமிழ்க்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்*, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிட், 2000.

REFERENCES

1. Tamilachi Thangapandian. *Manjanathi*. Chennai, Uyirmai Publishers, 2009.
2. Vallikannan. *Origin and Development of Tamil Poetry*. Chennai, New Century Book House pvt Ltd. 2000.